# இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மத்திய அமைச்சருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜன.15

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாடு மீனவர்களை கைது செய்வதும், அவர்களின் படகுகளை பறிமுதல் செய்வதுமான நிலை இலங்கை கடற்படையினரால் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இருக்கின்றனர். அவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுவிக்க கோரி மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் முதலமைச்சர் கூறி இருப்பதாவது:–

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை சேர்ந்த 12 மீனவர்கள் கடந்த 13ந் தேதியன்று நெடுந்தீவு அருகே 3 விசைப்படகுகளில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த விவகாரத்தை இலங்கை அரசுடன் உரிய தூதரக வழிமுறைகள் மூலம் எடுத்துச்சென்று, இலங்கை சிறையில் உள்ள தமிழ்நாடு மீனவர்களையும், அவர்களுடைய மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

# தேசிய கல்வி கொள்கையை ஒருபோதும் ஏற்கவில்லை இரு மொழி கொள்கையே தொடரும்: தமிழ்நாடு அரசு

சென்னை, ஜன.15–

தேசிய கல்வி கொள்கையை ஒருபோதும் ஏற்க மாட்டோம், இரு மொழி கொள்கையே தொடரும் என்று தமிழ்நாடு அரசு திட்டவட்டமாக தெரிவித்து உள்ளது.

தமிழ்நாட்டில் வெகுவிரைவில் மும்மொழி கொள்கையை தமிழ்நாடு அரசு கொண்டு வரும் என்று பாரதிய ஜனதா தலைவர் அண்ணாமலை கூறியிருந்தார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

பள்ளி மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவை ஊட்டுவதற்காக மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டது தமிழ்நாடு அரசு. அதன்படி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் செயற்கை நுண்ணறிவில் பயிற்சி அளிப்பதற்காக மைக்ரோசாப்ட் 'டீல்ஸ்' திட்டம் என்னும் ஒரு திட்டத்தை நாட்டிலேயே முதன் முறையாக கொண்டு வந்திருக்கிறது.

இது குறித்து பாரதிய ஜனதா மாநில தலைவர் அண்ணாமலை கூறுகையில், இது தேசிய கல்வி கொள்கையில் சொல்லப்பட்ட திட்டம் என்று தெரிவித்து இருந்தார். மேலும் வெகுவிரைவில் மும்மொழி கொள்கையையும் தமிழ்நாடு அரசு கொண்டு வரும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அண்ணாமலை, வரலாற்றை மாற்றவோ திரிக்கவோ முயலக்கூடாது. தமிழ்நாடு அரசு அவரது கூற்றை முற்றிலும் நிராகரிக்கிறது.

**செல்போனை கணித்து சொன்ன பெரியார்**

தகவல் தொழில்நுட்பத்துறையில் தமிழ்நாட்டுக்கு என்று வரலாறும், பாரம்பரியமும் உண்டு. 1970 ஜூலை 16ந் தேதி அன்றைய கிண்டி பொறியியல் கல்லூரியில் (இன்றைய அண்ணா பல்கலைக்கழகம்) நடந்த தமிழ் மன்ற விழாவில் பெரியார் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். அங்கு சென்ற பெரியாரிடம் கல்லூரிக்கு என புதிய கம்ப்யூட்டர் வாங்கி இருப்பதாக அங்கு இருக்கும் பேராசிரியர்கள் தெரிவிக்க அதைப் பார்க்க வேண்டும் என்று விரும்பிக்கேட்டார். பெரியார் படியேறிச்செல்ல முடியாத முதுமையில் இருந்தாலும், முதல் மாடிக்கு தன்னை தூக்கிச்செல்லுமாறு வேண்டி, அங்கு சென்று அந்த கம்ப்யூட்டரைப் பார்த்தார்.

அது, ஐ.பி.எம். கம்ப்யூட்டர் 1620 மாடல் கணினி ஆகும். எந்த தேதியைச் சொன்னாலும் அதன் கிழமையை மிகச் சரியாக அக்கணினி சொல்லி விடும் என்கிற செய்தியை அங்குள்ள பேராசிரியர்கள் சொல்ல பெரியார் சில தேதிகளை சொல்லி, கிழமை சரியாக வருகிறதா என்று பார்த்தார். தன்னுடைய பிறந்த நாளையும் அவர் சொல்ல சரியாக சனிக்கிழமை என்று கூறியது அந்த கணினி. அவரிடம் இந்த கணினி பற்றி கூறியது அன்றைய பேராசிரியரும், பின்னாளில் துணைவேந்தருமான வா.செ.குழந்தைசாமி ஆகும்.

வருங்காலத்தில் ஒவ்வொருவரின் சட்டைப்பையிலும் ஒரு தகவல் தொடர்பு கருவி இருக்கும் என்று இன்றைய செல்போன் குறித்து அன்றே கணித்து சொன்னவர் பெரியார்.

**ஐ.டி. நிறுவனங்களுக்கு வித்திட்ட கருணாநிதி**


இதன் தொடர்ச்சியாக 1997லேயே அன்றைய முதலமைச்சர் கருணாநிதி தொலைநோக்கு பார்வையோடு சிந்தித்து தமிழ்நாட்டுக்கு என தனியே தகவல் தொழில்நுட்பத்துறைக்கான கொள்கை ஒன்றை உருவாக்கி, தனியாக ஒரு துறையை உருவாக்கி அதற்கென ஒரு அமைச்சரை நியமித்தார். டைடல் பார்க் போன்ற கட்டமைப்புகளை மாநிலத்தில் உருவாக்கி உலக நிறுவனங்களின் முதலீட்டு மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக்காட்டினார். இதன் மூலம் சென்னை ஒரு ஐ.டி. மையமமாக (ஹப்) மாறியது. இன்றைக்கு பழைய மாமல்லபுரம் சாலை முழுவதும் காணப்படும் ஐ.டி. நிறுவனங்கள் அனைத்திற்கும் அன்றே வித்திட்டது கருணாநிதி உருவாக்கிய தனி கொள்கை தான்.

இந்த தொடர் ஓட்டத்தின் தொடர்ச்சியாக செயற்கை நுண்ணறிவுக்கு என தனியே ஒரு கொள்கை தமிழ்நாட்டில் 2020ல் உருவாக்கப்பட்டது. தேசிய கல்வி கொள்கை என்கிற ஒன்று உருவாக்கப்படுவதற்கு முன்பாகவே இவையெல்லாம் நடந்தன. தேசிய கல்வி கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்நாடு அரசு செய்ததை, செய்துகொண்டிருப்பதை தேசிய கல்வி கொள்கையில் இணைத்துவிட்டு தேசிய கல்வி கொள்கையின்படிதான் தமிழ்நாடு செயல்படுகிறது என்று சொல்வது நகைப்புக்குரியது.

தகவல் தொழில்நுட்பத்தில் முன்னோடி மாநிலமான தமிழ்நாட்டில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் செயற்கை நுண்ணறிவு, மெஷின் லேர்னிங் போன்றவற்றில் வருங்காலத்தில் மிகத் தீவிரமாக பயிற்சிகள் அளிக்கப்படும். ஏனெனில் செயற்கை நுண்ணறிவை கையிலெடுக்கும் மாநிலமே இன்னும் பத்தாண்டுகளில் முன்னணி மாநிலமாக இருக்கப்போகிறது.

பெரியார் காட்டிய பாதையில் தமிழ்நாடு அரசு முற்போக்கு பாதையில் செல்லும் அரசாகவே செயல்படும். அண்ணாமலை போல கனவு காண்பது போல மும்மொழி கொள்கை ஒருபோதும் தமிழ்நாட்டில் உருவாக வாய்ப்பு இல்லை; இருமொழி கொள்கையே தொடரும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில் நேற்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, சு.முத்துசாமி, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் சந்தித்து பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.

# மணலி–எண்ணூர் பகுதி மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம், வாழ்வாதாரத்துக்கு புதிய திட்டங்கள்: அரசு அறிவிப்பு

**சென்னை, ஜன.15–**

**மணலி–எண்ணூர் பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்களை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

மணலி–எண்ணூர் பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிட்டது. அதன் அடிப்படையில் விரிவான வளர்ச்சி திட்டம் தயாரிக்கும் வரை சில திட்டங்களை உடனடியாக செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

அதுதொடர்பாக தமிழ்நாடு அரசு சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

★ மாசு சுமை, உமிழ்வு விதிமுறைகள், கழிவுகள் மற்றும் பறக்கும் சாம்பல் வெளியேற்றம் மற்றும் இப்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் நீரின் தரத்தை கண்காணிப்பதற்காக, சிறப்பாக ஒரு மாசு கண்காணிப்பு மற்றும் கட்டளை மையத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மிகவும் நவீன தானியங்கி அமைப்புகள் மூலம் மாசுக்கட்டுப்பாட்டைக் கண்காணிக்க இந்த மையம் தகுதி வாய்ந்த ஊழியர்களைக் கொண்டிருக்கும். இந்த மையத்திற்கு உதவியாக மணலி மற்றும் எண்ணூர் பகுதியில் பிரத்யேகமாக 2 பறக்கும் படைகள் நிறுத்தப்படும்.

★ உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்காக மணலி எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துணர்வு நிறுவனம் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தை அரசு ஏற்படுத்தும். மணலி–எண்ணூர் பகுதியில் பெருமளவிலான நகர்ப்புற பசுமையாக்குதல், நீர்நிலைகளைப் புனரமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கை, சதுப்புநில மறுசீரமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றை மேற்கொள்ள ஒரு சிறப்புநிதி உருவாக்கப்படும். இந்த சிறப்பு நிதிக்கான ஆதாரம், அரசின் பல்வேறு திட்டங்கள் மூலமும், தொழில் நிறுவனங்களின் சமூகப்பொறுப்பு நிதியின் மூலமும் உருவாக்கப்படும்.

★ இந்த பகுதியில் உள்ள அனைத்து சிவப்புவகை தொழிற்சாலைகளின் பாதுகாப்பு தணிக்கையை தொழில் பாதுகாப்பு இயக்குனரகம், நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளும்.

★ திருவொற்றியூரில் 50 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனை மற்றும் 100 படுக்கைகள் கொண்ட நகர்ப்புற சமுதாய நல மையம் ஆகிய 2 அரசு மருத்துவமனைகள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. உடனடி மற்றும் மேம்பட்ட சுகாதார சேவைகளை வழங்குவதற்காக, கத்திவாக்கம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் 10 படுக்கைகளுடன் தரம் உயர்த்தப்படும்.

★ தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் இருந்து சாம்பல் அணைக்கட்டுக்கு ஈரமான சாம்பலை எடுத்துச்செல்லும் குழாய்கள் புதுப்பிக்கப்படும். மீன்வளத்துறை, உள்ளூர் மீனவ சமூகங்களை ஈடுபடுத்தி நிபுணத்துவ முகமைகளின் உதவியுடன் இப்பகுதியில் நிலையான மீன்பிடிப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

★ எண்ணூர் கழிமுகத்தில் உள்ள சதுப்பு நிலங்களை புனரமைக்கும் பணிகளை வனத்துறை தொடங்கியுள்ளது. இப்பணிகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்கவும், புலம்பெயர்ந்த பறவைகளுக்கு உதவும் வகையில் இப்பகுதியில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை மீட்டெடுக்கவும் இத்துறை தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

★ தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் மூலம் எண்ணூர், மணலி பகுதிகளில் உள்ள தொழில்சார் திறன் தேவைகளை கண்டறிந்து இளைஞர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப தலை சிறந்த நிறுவனங்களுடன் இணைந்து பயண ஊக்கத்தொகையுடன் கூடிய கட்டணமில்லா திறன் பயிற்சி வழங்கப்படும்.

★ அம்மோனியா வாயு கசிவு குறித்து விசாரிக்கப்படும் விசாரணையில், விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

★ அமோனியா வாயு கசிவு குறித்து ஏற்கனவே ஒரு தொழில்நுட்ப குழு அமைக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அக்குழுவின் இறுதி அறிக்கை பெறப்பட்ட பின்னர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டு மக்களின் நலனையும், நல்வாழ்வையும் இரு கண்களாக கருதி, கண்ணும், கருத்துமாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை முழுவீச்சில் செயல்படுத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளும். இவ்வாறு அதில் தெரி விக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க. சார்பில் 25ந் தேதி வீர வணக்க நாள் பொதுக்கூட்டம்: சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகிறார்

**சென்னை, ஜன.15–**

**தமிழகம் முழுவதும் வரும் 25ந் தேதி தி.மு.க. சார்பில் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. சென்னை அண்ணா நகரில் நடைபெறும் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகிறார்.**

இது தொடர்பாக தி.மு.க. மாணவர் அணி செயலாளர் சி.வி. எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியை எப்படியாவது பின்வாசல் வழியாக திணிக்க துடிக்கும் மத்திய அரசு ஒன்றை உணர வேண்டும். இந்தி திணிப்புக்கு ஆதரவு தெரிவித்து கைக்கட்டி, வாய் பொத்தி அமைதி காக்க தமிழ்நாட்டில் நடப்பது அடிமைகளின் ஆட்சி அல்ல. அண்ணா, கருணாநிதி ஆகியோரின் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடத்தும் திராவிட மாடல் ஆட்சி.

இந்தியைத் திணிக்க முயன்றோருக்கும், முயல்வோருக்கும் அச்சத்தை உருவாக்கிவிட்டு சென்றுள்ள மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திட, பொதுக்கூட்டங்கள் நடத்தி அவர்கள் கொண்டிருந்த தூய தமிழுணர்வுடன் நாமும் வாழ்ந்திட வேண்டும் என்ற சூளுரையை இந்நாளில் மேற்கொண்டிட, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரை தி.மு.க. மாணவர் அணி சார்பில் உரையாற்றுவோர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

சென்னை அண்ணாநகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகிறார்.

இதேபோல், ஆவடியில் அமைச்சர் துரைமுருகன், எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., மன்னார்குடியில் டி.ஆர்.பாலு எம்.பி., திருச்சியில் அமைச்சர் கே.என். நேரு, ஆண்டிப்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி, காஞ்சீபுரத்தில் பொன்முடி, நாமக்கல்லில் ஆ.ராசா எம்.பி., தென்காசியில் கனிமொழி கருணாநிதி எம்.பி., காஞ்சீபுரம் வடக்கு மாவட்டத்தில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், தா.மோ.அன்பரசன், திருவள்ளூரில் தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் பேசுகிறார்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் நடைபெற்ற சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழாவில் கிருஷ்ணகிரி பெருமாள் குழுவினர் சேவையாட்டம் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

# சென்னை சங்கமம்–நம்ம ஊரு திருவிழா: 18 இடங்களில் கலைநிகழ்ச்சி

சென்னை, ஜன.15

சென்னை மாநகரின் 18 இடங்களில் சென்னை சங்கமம்–நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது. பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக வருகை தந்து கலை நிகழ்ச்சியை கண்டு ரசித்தனர்.

தமிழக அரசின் கலை பண்பாட்டு துறையின் சார்பில், தமிழர்களின் கலை பண்பாட்டை பறைசாற்றும் விதத்தில் இசை, நடனம், இலக்கியங்கள் உள்ளடக்கிய 'சென்னை சங்கமம்–நம்ம ஊரு திருவிழா'வை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 13–ந்தேதி தீவுத்திடலில் தொடங்கி வைத்தார்.

இதைத்தொடர்ந்து, 'சென்னை சங்கமம்–நம்ம ஊரு திருவிழா' மாநகரின் வடசென்னை, சென்னை தெற்கு, மத்திய சென்னை, சென்னை மேற்கு ஆகிய பகுதிகளில் 18 இடங்களில் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில், சென்னை மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பூங்காவில் கடந்த 14–ந்தேதி நடந்த 'சென்னை சங்கமம்–நம்ம ஊரு திருவிழாவில், திருப்பத்தூர் தியாகராஜர் கலைக்குழுவினரின் நையாண்டி மேளத்துடனான காளியாட்டம், சிவதாண்டவம் நடைபெற்றது.

பூங்காவிற்கு மாலை நேர விளையாட்டிற்காக வந்த சிறுவர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர், நையாண்டி மேளத்துடனான காளியாட்டத்தை கண்டு மகிழ்ந்தனர்.

அதன்பிறகு, ஒடிசாவை சேர்ந்த சுரேந்திர சபர் குழுவினரின் சாம்பல் பூரி நடனம் நடைபெற்றது. சாம்பல் பூரி நடனத்தின்போது இசைக்கப்பட்ட அதிரவைக்கும் மேள சத்தமும், மதுரை பனையூர் ராஜா குழுவினரின் தப்பாட்டமும் அங்கிருந்த சிறுவர்களை ஆட்டம் போட வைத்தது.

தொடர்ச்சியாக, ஸ்ரீரஞ்சனி சந்தான கோபாலன் குழுவினரின் தமிழிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த மெல்லிசையை கண்டு, பார்வையாளர்கள் மெய்மறந்து போனார்கள்.

சேலம் தனபால் குழுவினரின் கோல் ஆட்டமும் சிறுவர்களை கவர்ந்தது. கலைவாணன் குழுவினரின் கையுறை பாவைக்கூத்து நிகழ்ச்சியை கண்டு சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்ச்சி அடைந்தனர்.

சிறுவயதில் கிராமங்களிலும், திரைப்படங்களில் இதுபோன்ற நிகழ்ச்சியை கண்டதாகவும் நிகழச்சியை கண்டவர்கள் உணர்ச்சிவசப்பட்டனர்.

இதுதவிர பல இடங்களிலும் சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. பொதுமக்கள் கலை நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் கூட்டம் கூட்டமாக வந்து கண்டு ரசித்தனர். சென்னையின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சிகளை, தி.மு.க. எம்.பி., கனிமொழியும் நேரில் சென்று பார்வையிட்டு கலைஞர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.



திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு அடுத்த வைரவன் குப்பம் கிராமத்தில் பொங்கல் விழா கொண்டாட்டங்கள் நடைபெற்றன. லைட் ஹவுஸ் ஊராட்சி மன்ற தலைவர் கஜேந்திரன்,வைரவன் குப்பம் கூட்டுறவு சங்க தலைவர் ஞானமூர்த்தி,வைரவன் குப்பம் கிராம நிர்வாகிகள் நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். கிராம இளைஞர்கள், நிகழ்ச்சி ஏற்பாடு செய்து விளையாட்டு போட்டியினை நடத்தினர்.



பொங்கல் திருநாளை முன்னிட்டு த.மா.கா தலைமை நிலைய செயலாளர் ஜி.ஆர்.வெங்கடேஷ் தலைவர் ஜி.கே. வாசன் எம்.பி.க்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து கூறினார். நிர்வாகிகள் சக்தி வடிவேல்,முனைவர் பாஷா, பி.சந்திரன்,சென்னை நந்து,என் டி எஸ் சார்லஸ், லீக் மோகன்,கே டி எஸ் ராஜா கோவிந்தசாமி,அருண்குமார்,கல்யாணி,ஞானமரியா,டைல்ஸ் முருகன், எஸ்எம் வேதா,இருதயராஜ்,மயிலை கேஸ் பீட்டர் மற்றும் பலர் உள்ளனர்.


**போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்**

ஆன்லைன் மூலம் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: தனி கார்ப்பரேட் பார்க், 5–வது தளம், 158, சி.எஸ்.டி. ரோடு, கலினா, சாந்தாகுரூஸ் (இ), மும்பை–400 098. Tel: 022–6741 2314, Fax: 022–6741 2313
CIN: U67190MH2007PTC168303 Email: info@phoenixarc.co.in Website: www.phoenixarc.co.in

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

டாடா கேபிடல் பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (டிசிஎப்எஸ்எல்) மூலம் அதன் சார்பில் [illegible] அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 24.02.2023 அன்று போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டின் (போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் 19–5ன் திட்டம் ஏன் டிரஸ்டியாக செயல்படுகிறார்) (பிஏஆர்சி) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஈடுபெற்ற கடன்தாரரான ஜெயகுமார் ஆர். பி.கே மற்றும் திருமதி சுஜா ஜெ ஆகியோர் பிஏஆர்சி–க்கு, கடன் கணக்கு எண் 3122017–ன் கீழ் 31.12.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.1,27,51,360/– (ரூபாய் கோடியே இருபத்தேழு லட்சத்து ஐம்பத்தோராயிரத்து முன்னூற்று அறுபது மட்டும்) மற்றும் 31.12.2023 அன்று முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் மேலும் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் 08.02.2024 அன்று பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.1,26,00,000/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்தாறு லட்சம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.12,60,000/– (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 07.02.2024 அன்று 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்தின் விவரம்: சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். பிளாட் எண்.சிஎஸ்–2, 2வது தளம், பிளாக்–சி, மனை எண்.ஏ1,ஏ2,பி1, கணபதி நகர், லோகாம்பாள் தெரு, சர்வே எண்.136, புதிய சர்வே எண்.136/2, வண்டலூர், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம், சென்னை – 600 048, மொத்த நிலம் 6680 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலத்தின் விஸ்தீரணம் 556 சதுர அடி. பிளாட்டின் சூப்பர் பில்டப் ஏரியா 1158 சதுர அடி (பொதுப் பகுதியை உள்ளடக்கி உள்ளது), அஞ்சல் முகவரி : பிளாட் எண்.சிஎஸ்–2, 2வது தளம், பிளாக்–சி, மனை எண்.ஏ1,ஏ2,பி1, கணபதி நகர், லோகாம்பாள் தெரு, வண்டலூர், சென்னை – 600 048.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி இ–ஏலத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து திரு. விஷால் ஆதிஷேசன் (+91 9941016600), திரு. சூரிய நாராயணன் பி (+91 9600222111), திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248), திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9884718338) & திரு. ராஜேந்தர் தஹியா (+91 8448264515) ஆகியோரை ஏலதாரர் தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளம் www.phoenixarc.co.inல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://phoenixarc.co.in?p=4749 and /or on https://bankauctions.inல் பார்வையிடலாம்.

இடம்: சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, போனிக்ஸ் ஆர்க் பிரைவேட் லிமிடெட்டுக்காக
தேதி: 16.01.2024 — (போனிக்ஸ் டிரஸ்ட் எப்ஒய் 19–5 திட்டம்–ஏன் டிரஸ்டியாக செயல்படுகிறார்)



**kotak Kotak Mahindra Bank — கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: 185, 2வது தளம், அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை 600 006.

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு**

பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டினால் (பிஎச்எப்எல்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் (கேஎம்பிஎல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 03.02.2023 சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. **திரு. ஜிஆர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் திருமதி. ஜி.கே. அருணா** ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண். 403TLH68909949, 403THT68910412–ன்கீழ் 6.1.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.44,60,686/–(ரூபாய் நாற்பத்து நான்கு லட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்று எண்பத்தாறு மட்டும்)** மற்றும் 7.1.2024 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் **02.02.2024** நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.29,00,000/– (ரூபாய் இருபத்தொன்பது லட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை ரூ.2,90,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 01.02.2024 அன்று வரை.

**சொத்து விவரம்:** சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். பிளாட் எண்.சிஎஸ்–2, 2வது தளம், பிளாக்–சி, மனை எண்.ஏ1,ஏ2,பி1, கணபதி நகர், லோகாம்பாள் தெரு, சர்வே எண்.136, புதிய சர்வே எண்.136/2, வண்டலூர், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு மாவட்டம், சென்னை – 600 048, மொத்த நிலம் 6680 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலத்தின் விஸ்தீரணம் 556 சதுர அடி. பிளாட்டின் சூப்பர் பில்டப் ஏரியா 1158 சதுர அடி (பொதுப் பகுதியை உள்ளடக்கி உள்ளது), அஞ்சல் முகவரி : பிளாட் எண்.சிஎஸ்–2, 2வது தளம், பிளாக்–சி, மனை எண்.ஏ1,ஏ2,பி1, கணபதி நகர், லோகாம்பாள் தெரு, வண்டலூர், சென்னை – 600 048.

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. சூரிய பெரியசாமி (+91 9600222111), திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248), திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9884718338) மற்றும் திரு. ராஜேந்திர தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 16.01.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்